**தலைப்புகள் 1 முதல் 22 வரையான விசேட செலவின அலகுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - விசேட செலவின அலகு தலைப்புகளுக்குரிய கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு விசேட செலவின அலகுத் தலைப்புகளுக்கு உரித்தான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**விசேட செலவின அலகு தலைப்புகளுக்குரிய கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

**1. விசேட செலவின அலகுத் தலைப்புகள் மற்றும் திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள்**

| தலைப்பு | திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் பெயர்கள் |
|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் |
| 3 | விசேட பணிகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) |
| 4 | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் |
| 5 | அமைச்சரவை அலுவலகம் |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் |

| | |
|---|---|
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் |
| 16 | பாராளுமன்றம் |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 15,615.785 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 14,247.732 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புகள் ரூபா 0.046 மில்லியனிற்கும் ரூபா 844.294 மில்லியனிற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.10 சதவீதத்திற்கும் 46.18 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | திணைக்களம் / அலுவலகம் / ஆணைக்குழு | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 4,659,020 | 4,410,251 | 4,490,565 | 3,734,412 | 168,455 | 675,839 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 236,325 | 96,400 | 230,443 | 72,925 | 5,882 | 23,475 |
| 3 | விசேட பணிகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 328,675 | 128,050 | 305,781 | 105,435 | 22,894 | 22,615 |
| 4 | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் | 121,500 | 52,200 | 89,469 | 4,.025 | 32,031 | 48,175 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 65,075 | 12,100 | 51,896 | 2,124 | 13,179 | 9,976 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 114,609 | 9,079 | 114,574 | 8,234 | 35 | 845 |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 36,672 | 1,275 | 32,857 | 963 | 3,815 | 312 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 40,023 | 5,360 | 39,674 | 5,219 | 349 | 141 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | 17,075 | 915 | 13,571 | 874 | 3,504 | 41 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 163,570 | 28,020 | 161,709 | 18,959 | 1,861 | 9,061 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 41,340 | 4,800 | 32,043 | 769 | 9,297 | 4,031 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 27,004 | 4,050 | 25,244 | 2,619 | 1,760 | 1,431 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 149,950 | 12,755 | 144,844 | 5,588 | 5,106 | 7,167 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 450,805 | 32,300 | 450,678 | 31,959 | 127 | 341 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 68,055 | 50,550 | 58,917 | 6,085 | 9,138 | 44,465 |
| 16 | பாராளுமன்றம் | 1,569,827 | 114,650 | 1,535,659 | 61,383 | 34,168 | 53,267 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் | 24,725 | 1,300 | 24,132 | 1,258 | 593 | 42 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் | 33,750 | 950 | 33,626 | 858 | 124 | 92 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 62,620 | 36,425 | 60,803 | 36,275 | 1,817 | 150 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 1,328,898 | 41,000 | 1,313,666 | 40,616 | 15,232 | 384 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 742,780 | 281,600 | 728,603 | 158,987 | 14,177 | 122,613 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 8,656 | 801 | 8,611 | 800 | 45 | 1 |
| | | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ----------- |
| | மொத்தம் | **10,290,954** | **5,324,831** | **9,947,365** | **4,300,367** | **343,589** | **1,024,464** |
| | | ====== | ======= | ======== | ====== | ====== | ======= |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானம்**

2013 ஆம் ஆண்டில் 22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கிடையே ஒரு திணைக்களத்தின் ஒரு வருமானக் குறியீட்டிற்கு ரூபா 90.00 மில்லியன் வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 7.98 மில்லியனால் அதாவது 8.86 சதவீதத்தினால் விஞ்சி ரூபா 97.98 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சியமை | சவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 20.03.02.01 | 90.00 | 97.98 | 7.98 | 8.86 |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

21 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்கென பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதி என்பன கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 | 00101 | 23,000,000 | 21,116,324 | 12,500,000 | 19,176,280 | 100,000,000 | 75,621,858 |
| 2 | 00201 | 5,500,000 | 4,131,992 | 3,000,000 | 4,643,465 | 22,000,000 | 20,830,416 |
| 3 | 00301 | 4,000,000 | 3,949,768 | 900,000 | 2,232,234 | 11,000,000 | 6,997,762 |
| 4 | 00401 | 3,000,000 | 169,270 | 1,000,000 | 1,961,001 | 15,000,000 | 2,358,296 |
| 5 | 00501 | 3,000,000 | 2,665,664 | 2,400,000 | 2,558,132 | 14,000,000 | 10,913,332 |
| 6 | 00601 | 8,000,000 | 5,610,194 | 3,500,000 | 5,113,652 | 32,000,000 | 21,370,228 |
| 7 | 00701 | 3,000,000 | 2,517,834 | 1,200,000 | 1,686,371 | 20,000,000 | 8,088,796 |
| 8 | 00801 | 1,800,000 | 804,502 | 1,100,000 | 1,305,353 | 12,000,000 | 3,837,446 |
| 9 | 00901 | 1,000,000 | 708,565 | 200,000 | 403,043 | 3,400,000 | 1,524,758 |
| 10 | 01001 | 5,500,000 | 2,297,231 | 3,000,000 | 3,864,679 | 25,000,000 | 16,167,134 |
| 11 | 01101 | 3,500,000 | 2,053,763 | 1,000,000 | 1,619,437 | 20,000,000 | 7,154,988 |
| 12 | 01201 | 1,500,000 | 759,659 | 600,000 | 858,611 | 6,000,000 | 2,648,335 |
| 14 | 01401 | 25,000,000 | 20,638,540 | 12,000,000 | 14,020,029 | 90,000,000 | 50,500,914 |
| 15 | 01501 | 5,300,000 | 2,824,473 | 2,000,000 | 4,135,348 | 24,000,000 | 12,532,391 |
| 16 | 01601 | 39,000,000 | 21,369,869 | 24,000,000 | 29,349,039 | 175,000,000 | 136,143,054 |
| 17 | 01701 | 1,500,000 | 1,488,610 | 800,000 | 1,274,895 | 3,500,000 | 2,752,295 |
| 18 | 01801 | 1,500,000 | 1,490,450 | 1,000,000 | 1,622,741 | 8,500,000 | 4,523,590 |
| 19 | 01901 | 2,000,000 | 1,791,860 | 1,000,000 | 1,807,010 | 9,000,000 | 4,524,685 |
| 20 | 02001 | 23,000,000 | 19,264,340 | 13,000,000 | 14,660,729 | 80,000,000 | 62,791,918 |
| 21 | 02101 | 55,000,000 | 40,714,750 | 43,000,000 | 52,537,242 | 300,000,000 | 251,605,239 |
| 22 | 02201 | 800,000 | 301,397 | 200,000 | 531,111 | 3,000,000 | 1,634,684 |

### 2.3.2 வர்த்தகமற்ற முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லை

ஆணைக்குழு ஒன்றின் வர்த்தகமற்ற முற்பணக் கணக்குச் செயற்பாடுகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை பின்பற்றப்பட்டிருந்ததுடன் ஆகக் கூடிய செலவின எல்லை மற்றும் ஆகக் கூடிய வரவு மீதி எல்லைகளை விஞ்சி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10 | 01002 | 7,000,000 | 10,595,700 | 1,500,000 | 6,962,050 | 12,000,000 | 18,585,932 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கிடையே 17 நிறுவனங்களது 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திறைசேரிப் புத்தகங்களின் படியான கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 58,863,605 தொகையான வரவு மீதியும் 02 நிறுவனங்களில் ரூபா 1,994,261 தொகையான செலவு மீதியுமாக மீதிகளின் கூட்டுத்தொகை 56,869,344 ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | திணைக்களம்/அலுவலகம்/ ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரவு மீதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு மீதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 7002/0000/00/0117/0013/000 | 6,874,623 | - |
| 4 | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் | 7002/0000/00/0390/0013/000 | 17,958,186 | - |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 7002/0000/00/0119/0013/000 | 13,030 | - |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 7002/0000/00/0297/0013/000 | 787,996 | - |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 7002/0000/00/0122/0013/000 | 1,729,387 | - |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 7002/0000/00/0365/0013/000 | 1,743 | - |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | 7002/0000/00/0366/0013/000 | 1,019,112 | - |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 7002/0000/00/0139/0013/000 | 890,499 | - |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 7002/0000/00/0279/0013/000 | 89,991 | - |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 7002/0000/00/0256/0013/000 | 994,887 | - |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 7002/0000/00/0137/0013/000 | 3,007,930 | - |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 7002/0000/00/0138/0013/000 | 283,687 | - |
| 16 | பாராளுமன்றம் | 7002/0000/00/0120/0013/000 | 704 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் | 7002/0000/00/0275/0013/000 | - | 1,463,355 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் | 7002/0000/00/0276/0013/000 | 219,258 | - |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 7002/0000/00/0277/0013/000 | 2,012 | - |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 7002/0000/00/0121/0013/000 | 21,893,546 | - |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 7002/0000/00/0001/0013/000<br>7003/0000/00/0089/0013/000 | 3,747,325<br>349,689 | -<br>- |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 7002/0000/00/0278/0013/000 | - | 530,906 |
| | மொத்தம் | | **58,863,605** | **1,994,261** |

## 2.4.2 பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கிடையே 14 நிறுவனங்களினது திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 848,443,490 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| **தலைப்பு** | **திணைக்களம்/அலுவலகம்/ஆணைக்குழு** | **கணக்கு இலக்கம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** |
|---|---|---|---|
| | | | **ரூபா** |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 6000/0000/00/0006/0077/000 | 296,940,282 |
| | -மேற்படி- | 6000/0000/00/0015/0001/000 | 528,522,772 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 6000/0000/00/0015/0002/000 | 250,865 |
| 3 | விசேட பணிகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 6000/0000/00/0015/0190/000 | 238,088 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 6000/0000/00/0015/0003/000 | 142,720 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 6000/0000/00/0015/0008/000 | 2,289,429 |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 6000/0000/00/0002/0032/000 | 3,375 |

| | | | |
|---|---|---|---|
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 6000/0000/00//0015/0010/000 | 3,156,234 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 6000/0000/00/0015/0013/000 | 247,151 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 6000/0000/00/0015/0014/000 | 30,000 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 6000/0000/00/0015/0110/000 | 1,179,250 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 6000/0000/00/0015/0111/000 | 3,650 |
| 16 | பாராளுமன்றம் | 6000/0000/00/0015/0004/000 | 2,464,152 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 6000/0000/00/0011/0011/000 | 4,519,833 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 6000/0000/00/0015/0012/000 | 8,455,689 |
| | | | ------------------- |
| | மொத்தம் | | **848,443,490** |
| | | | =========== |

## 1. தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சனாதிபதி செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதி சனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இல் குறிப்பிடப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 தொடக்கம் 1.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

---

00101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 687,420 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை

அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சனாதிபதி செயலகத்தினால் அந்த அறிக்கை 2014 மே 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக |
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 162 | 45 | 226 | 11 | 64 |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 95 | 16 | 128 | 07 | 33 |
| (iii) | இரண்டாம் நிலை | 326 | 80 | 258 | 104 | 68 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 603 | 142 | 475 | 168 | 128 | 26 |
| மொத்தம் | | 1,008 | 479 | 794 | 626 | 214 | 147 |

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 214 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 2 – பிரதம அமைச்சர் அலுவலகம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி பிரதமரின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) தொடக்கம் (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 தொடக்கம் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

08 செலவின விடயங்களுக்காக ரூபா 19,600,000 கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 12,502,997 ஆக இருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 35 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

00201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,836 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2013 ஆகஸ்ட், செப்தெம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் போன்ற மாதங்களுக்குரிய 2014 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட ரூபா 3,072,070 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள், ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 நட்டங்களும் சேதங்களும்**

''விசும்பாய'' உத்தியோகபூர்வ இல்லத்திலும் பிரதமர் அலுவலகத்திலும் மின் கட்டணப் பட்டியல் உரிய திகதியில் செலுத்தாமையினால் மீளாய்வாண்டில் முறையே ரூபா 25,921 மற்றும் ரூபா 107,074 ஆக ரூபா 132,995 கூட்டுத்தொகையான தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 45 | 41 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 67 | 66 | 01 |
| | மொத்தம் | 131 | 123 | 08 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. தலைப்பு 3 – விசேட பணிகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்)**

**3.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

விசேட பணிகளுக்கான செயலகத்தின் (சிரேஷ்ட அமைச்சர்கள்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பணியகச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான

தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் விசேட பணிகளுக்கான செயலகத்தின் (சிரேஷ்ட அமைச்சர்கள்) ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 தொடக்கம் 3.9 வரையுள்ள ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவராமை

செயலகத்தால் பின்வரும் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

| | |
|---|---|
| (ii) கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) பாதீட்டு முரண்**

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,250,000 தொகையான மொத்த மூலதன ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 15 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,070,000 தொகையான மொத்த மீண்டெழும் ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 72 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---------------------------------------------------------------------

### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

--------------------------------------------------------

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக முறையான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

------------------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாடுடையவையாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவான பயன்பாடுடையவையாகக் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | மடி கணனி மற்றும் சேர்வர் இயந்திரம் | 05 | 06 மாதங்கள் |
| (ii) | கைவிரலடையாள இயந்திரம் | 01 | 01 வருடம் |

#### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அலுவலகத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் குறைவான காலமாக தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 13,733,247 ஆக காணப்பட்டது.

### 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 94(1) | 888,603 | நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணம் 115(3) ஆ | 365,337 | முன்னைய ஆண்டிற்கு உரித்தான உரித்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் முறையான அதிகாரப்பொறுப்புடைய உத்தியோகத்தர் ஒருவரின் உறுதிப்படுத்தல் இருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 753(1) மற்றும் 753(2) | 2,350,720 | பொருள் வழங்கல் மற்றும் பெறுவனவுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 272(3) | 725,350 | 16 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (v) நிதிப் பிரமாணம் 137(5) | 182,932 | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகையில் அவற்றைப் பரீட்சித்து சரியாகப் பொறுப்பேற்பதற்கு முன்னர் இதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2007 மே 09 ஆம் திகதிய 10/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2009 | | விடுதி வசதிகளுக்கு உரித்துடைய அமைச்சர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாதாந்த மின்சாரப் பட்டியல் மற்றும் நீர்ப் |

| | |
|---|---|
| மார்ச் 05 ஆம் திகதிய 10/2007 (1) ஆம் இலக்க சுற்றறிக்கை | பட்டியல் உள்ளடங்கலாக மாதாந்தம் ரூபா 100,000 தொகையான படிப்பணம் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் இது ரூபா 50,000 ஆகக் குறைக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கை ஏற்பாடுகள் அவ்வாறிருந்த போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அலுவலக விடுதிகள் வழங்கப்பட்டுள்ள கௌரவ சிரேஷ்ட அமைச்சர்கள் இருவரின் விடுதிகளின் மாதாந்த மின்சாரப்பட்டியல் மாத்திரம் ரூபா 110,000 இற்கும் ரூபா 133,595 இற்கும் இடைப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்தன. |
| (இ) அரச கணக்குகள் சுற்றறிக்கை<br>---------------------------------------<br>2013 யூலை 12 ஆம் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி | முறையான குறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் புதிய உற்பத்திக்கான தொடர்பாடல் செயற்திட்டத்தால் ரூபா 182,932 பெறுமதியான மரத்தளபாடங்களின் கொள்வனவிற்காக 2013 திசெம்பர் 31 ஆம் திகதி தனியார் கம்பனிக்குப் பணம் செலுத்தியிருந்ததுடன் 2014 யூன் 11 ஆம் திகதி வரையிலும் பொருட்கள் அந் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்தின் பெயரில் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 222,040 தொகையான காசோலை வரையப்பட்டு கையில் வைத்துக்கொள்ளப்பட்டு பின்னர் நாள் நீடிக்கப்பட்டு 2014 மே 16 ஆம் திகதி அவ் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இப் பொருட்கள் 2014 மே மாதம் நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் பொருட் பதிவேட்டில் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி பொருட்கள் பெறப்பட்டமைக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.8 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்

அலுவலகத்திற்கு உரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிராத பந்திகளின் தொடர்பு பின்வருமாறாகும்.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2012 | 1.6 (அ) | செயற்திட்ட மானியங்களிலிருந்து வழங்கப்பட்ட வாகனங்கள் அச் செயற்திட்டங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஊடக மற்றும் பிரச்சார செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட வாகனம் ஒன்று விசேட செயற்பாடு தொடர்பான செயலகத்திற்குக் கொண்டுவரப் பட்டிருந்தது. |

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 04 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 24 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 102 | 102 | - |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 140 | 140 | - |
| | மொத்தம் | 297 | 271 | 26 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 26 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 4 – மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதி பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 4.4 தொடக்கம் 4.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

---

அலுவலகத்தினால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைச் சாதனங்கள் மற்றும் கணனி மென்பாகங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,700,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 9 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**4.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தினது கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4.3 உள்ளகக் கணக்காய்வு**

அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்**

2013 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 செயலாற்றல்**

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அலுவலகத்தினால் 2013 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3,173 ஆக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின்போது புதிதாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,654 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது தீர்ப்பதற்குள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 4,827 ஆகும். இந்த வழக்குகளின் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் போது 1,560 வழக்குகள் முடிவடைந்திருந்தமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்ப்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3,267 ஆகக் காணப்பட்டது.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 23 | 20 | 03 |
| மொத்தம் | 23 | 20 | 03 |

## 05. தலைப்பு 05 – அமைச்சரவை அலுவலகம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அமைச்சரவை அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அமைச்சரவையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது

தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 5.4 இலிருந்து 5.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,000,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 13,687,984 தொகையான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 17 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

சம்பளத்திலிருந்து கடன் தவணைப் பணத்தை அறவிடும் போது கடன் வகை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணை அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படாத 04 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அலுவலகத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 255,507 ஆகும்.

## 5.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| அரச நிதிச் சுற்றுநிருபம் | |
| 2011 நவம்பர் 15 ஆந் திகதிய 01 ஆம் இலக்க கடிதத்தின் 02 ஆம் பந்தி | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தியின் v இன் கீழ் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் தொகுதி அல்லது |

உத்தியோகத்தருக்கு அரச செலவினத்தில் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கும் பட்டியல்களைத் தீர்ப்பதற்கும் தீர்மானிக்கப்படுமாயின் அது தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய முன்மொழிவுகள் தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து அதன் சிபார்சைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 13 உத்தியோகத்தர்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 செயற்திட்ட அமுலாக்கலில் நலிவுகள்

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

அலுவலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| பதிவேடுகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் | 9,000,000 | 2012 | பதிவேடுகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ முறைமையை விட விரிவான e – cabinet செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்தல் |

## 5.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை

கணனி வலைப்பின்னலுக்குப் பொருத்துவதற்காக பாதுகாப்பு உபகரணமொன்று (Fire wall) கொள்வனவு செய்யும் கொள்வனவு நடைமுறைகளின் போது இரண்டாவது ஆகக் குறைந்த விலையான ரூபா

262,640 சமர்ப்பித்த நிறுவனம் உபகரணத்தை வழங்குவதற்கு 05 இற்கும் 06 இற்கும் இடையிலான வாரங்கள் எடுத்தமையினால் நிராகரிக்கப்பட்டு நான்காவது குறைந்த விலையான ரூபா 400,120 சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் உபகரணத்தை வழங்குவதற்கு 07 மாதகாலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் நான்காவது விலையில் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவுக் குழு எடுத்த தீர்மானத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதற்காக அரசாங்கத்திற்கு ரூபா 137,480 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) 2012 சனவரி 05 ஆந் திகதி ரூபா 1,344,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நிழற்படப்பிரதி இயந்திரத்தின் பொறுப்புக் காலம் 03 வருடங்கள் இருக்கும் போது 2013 யூன் 25 ஆந் திகதி ரூபா 270,648 தொகையும், 2014 சனவரி 30 ஆந் திகதி ரூபா 120,512 தொகையும் பழுதுபார்த்தலுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 5.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 15 | 10 | 05 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 29 | 22 | 07 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 29 | 27 | 02 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 80 | 67 | 16 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 06. தலைப்பு 6 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 02 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள

பொது அவதானிப்புக்கள் மற்றும் 6.4 மற்றும் 6.5 இலுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

2 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 542,099 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 28 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

00601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2001 யூலை 01 ஆந் திகதி சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 32,320 தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

## 6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 33 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 06 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 96 | 74 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 48 | 33 | 15 |
| | மொத்தம் | 195 | 146 | 49 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 49 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகத்தினால் முடியாதிருந்தது.

## 07. தலைப்பு 7 – நீதிச் சேவை ஆணைக்குழு

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இல் காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 7.4 இலிருந்து 7.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 300,000 தொகையான மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாட்டின் 42 சதவீதத்திற்கும் 89 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

(iii) வரையறைகள் பின்பற்றப்பட்டிராத காரணத்தால் ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டிற்கு மேலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 7.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 26 ஆம் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 7.4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

2013 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.5 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/ 01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அம் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு 2014 ஒக்டோபர் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிடம் உள்ள சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

நீதி அமைச்சிற்கு உரித்தான ரூபா 800,000 பெறுமதியான ஓர் வாகனம் முறையான அங்கீகாரம் இன்றி ஆணைக்குழுவால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

### 7.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 09 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 33 | 21 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 16 | 08 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 93 | 60 | 34 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 34 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 08. தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

---

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான

முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 மே 12 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 8.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்பு மற்றும் 8.4 இலிருந்து 8.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

---

07 செலவு விடயங்களுக்கு கூடுதலாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 08 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 8.4.1 உள்ளகக் கணக்காய்வு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 8.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

ஆணைக்குழுவால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.6 செயலாற்றல்

**முறைப்பாடுகளின் விசாரணை**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 11 அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது பின்வரும் 414 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

| | முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை (உதாசீனம்) | 134 |
| (ஆ) | அதிகாரத் துஷ்பிரயோகம் | 103 |
| (இ) | பக்கசார்பு | 83 |
| (ஈ) | ஏனைய | 30 |
| (உ) | அடித்தல் | 14 |
| (ஊ) | சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் | 21 |
| (எ) | பொய்க் குற்றச்சாட்டு/ கைது செய்தல் | 17 |
| (ஏ) | துன்புறுத்துதல் | 05 |

| | | |
|---|---|---|
| (ஐ) | மகளிருக்கும் சிறுவர்களுக்கும் துன்புறுத்துதல் | 04 |
| (ஒ) | இலஞ்ச ஊழல் | 03 |
| (ஓ) | பொலிஸ் கைதில் இருக்கையில் மரணித்தல் | - |
| | | ------- |
| | மொத்தம் | 414 |
| | | ==== |

மீளாய்வாண்டின் போது அந்த முறைப்பாடுகளில் 307 அதாவது 74 சதவீதம் தீர்க்கப்பட்டிருந்தது.

## 8.7 விசாரணைகளின் வினைத்திறன்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக நேரடியாக செயற்பட முடியாதிருந்ததுடன் விசாரணையின் மூலம் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக தொடர்நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக அத் தகவல்கள் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 8.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 26 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | மொத்தம் | 64 | 53 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் முடியாதிருந்தது.

(ஆ) உள்ளபடியான பதவியணியினரில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற 13 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலையில் 02 உத்தியோகத்தர்களும், ஆரம்ப நிலையில் ஒரு உத்தியோகத்தரும் உள்ளடங்கியிருந்தனர்.

## 09. தலைப்பு 9 – நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை

---

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 30 ஆந் திகதி நிர்வாக மேன்முறையீட்டு நியாயச் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 9.2 கணக்குகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 9.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே 9.4 தொடக்கம் 9.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

## 9.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 9.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 மற்றும் அதற்குப் பின்னரும் சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபங்களின் பிரகாரம் சபையினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 யூன் 10 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| II ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | அரசாங்க சேவையின் சகல பதவிகளுக்கும் பதவியின் சம்பள அளவு, தேவையான தகைமைகள், வயது எல்லை போன்ற ஏனைய சகல விபரங்களும் உரியவாறு உள்ளடக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் சபையினால் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிதிச்சுற்றுநிருபம் | |
| 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அரச நிறுவனங்கள் மோட்டார் வாகனக் காப்புறுதியை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான வாகனமொன்று அச்சுற்றுநிருபத்திற்கு முரணாக வேறு காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 112,899 காப்புறுதித் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

### 9.6 செயலாற்றல்

2002 இன் 04 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாயச் சபை அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் நியாயச் சபைக்கு ஏதாவது மேன்முறையீடு கிடைக்கப் பெற்ற நாள் தொடக்கம் 02 மாத கால எல்லைக்குள் விசாரித்து பொருத்தமானதொரு முடிவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபையில் 423 மேன்முறையீடுகள் தீர்ப்பதற்காக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 90 முறைப்பாடுகள் மாத்திரம் விசாரணை செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### 9.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 |
| (ஆ) | இரண்டாம் நிலை | 12 | 09 | 03 |
| (இ) | ஆரம்ப நிலை | 04 | 04 | - |
| | மொத்தம் | 21 | 17 | 04 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 10. தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான

முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 10.4 இலிருந்து 10.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர்கள் கேட்டு விலகியதன்

அடிப்படையில் அறவிடுவதற்கிருந்த நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,827 ஆக இருந்ததுடன் அது 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரியதாகும்.

(ii) திணைக்களப்புத்தகங்களின் பிரகாரமும் திறைசேரி கணனி அறிக்கைகளின் பிரகாரமும் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் ரூபா 236,827 தொகையான வேறுபாடு காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களப்புத்தகங்கள் திறைசேரிப்புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத முற்பணம்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத இலஞ்ச சுற்றிவளைப்புக்களுக்காக பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,585,932 ஆக இருந்ததுடன் அதில் 04 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 5,467,922 ஆகும். அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கால இடைவெளி | வழக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| வருடம் 3 இற்கும் 4 இற்கும் இடையே | 44 | 868,500 |
| வருடம் 5 இற்கும் 10 இற்கும் இடையே | 88 | 4,349,825 |
| வருடம் 10 இற்கும் 20 இற்கும் இடையே | 31 | 233,320 |
| வருடம் 20 இற்கும் 30 இற்கும் இடையே | 09 | 13,850 |
| வருடம் 30 இற்கு மேல் | 08 | 2,427 |
| | 180 | 5,467,922 |

மேற்கூறப்பட்ட 180 வழக்குகளில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சட்ட நடவடிக்கைகள் முடிவுற்ற வழக்குகளுக்குரிய முற்பணம் தீர்க்கக்கூடியதாக இருந்த போதிலும் அந்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 10.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்கம் மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.2 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 10.5 செயலாற்றல்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,182 ஆக இருந்ததுடன் அதில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மேலும் விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | காலம் |
|---|---|---|
| 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 188 |
| 3 வருட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 170 |
| 2 வருட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 494 |
| | | 852 |

இதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளில் 39 சதவீதம் 2 வருடங்கள் முதல் 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பழமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**10.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 20 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 53 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 64 | 59 | 05 |
| | மொத்தம் | 165 | 133 | 32 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவினால் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 11. தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்

### 11.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**11.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**11.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) தொடக்கம் (ஆ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 11.4 தொடக்கம் 11.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 தொகையான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 17 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 295,236 ஆக இருந்தது.

(ii) 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(1) ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 250,000 தொகையான ஆகக் கூடிய கடன் எல்லையினை விஞ்சி ஒரு உத்தியோகத்தருக்கு இடுக்கண் கடன் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட கடனை 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 11.4 நட்டங்களும் இழப்புகளும்

2013 ஆம் ஆண்டின் போது 02 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் அந்த விபத்துக்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இரண்டு வாகனங்களுக்குரிய மொத்த நட்டம் ரூபா 175,020 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 17,468 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

## 11.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 06 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 46 | 26 | 20 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 07 | 06 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 77 | 44 | 36 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 36 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12. தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு

### 12.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 12.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 12.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 12.4 இலிருந்து 12.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கனணித் துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) பாதீட்டு முரண்**

-----------------------------

பின்வரும் முரண்கள் கண்டறியப்பட்டன.

(i) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டமை மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் செயற்படுத்தப்படாமை போன்ற காரணத்தினால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 1,430,894 தொகையான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 14 சதவீதம் தொடக்கம் 69 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

-----------------------------

கட்டுநிதிக் கணக்கில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ஒரு தடவை வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய குறித்த பணிக்கான உபகட்டுநிதி திறைசேரி அங்கீகாரத்தில் ரூபா 50,000 வரை அதிகரித்திருந்த போதிலும் அவ் எல்லையும் மிகைத்து 04 உத்தியோகத்தர்களுக்கு 16 சந்தர்ப்பங்களின் போது ரூபா 50,000 முதல் ரூபா 130,000 இற்கு இடைப்பட்ட ரூபா 998,500 கூட்டுத்தொகையான குறித்த பணிக்கான உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக மீளாய்வாண்டில் 21 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 638,000 கூட்டுத்தொகையான முற்பணத்தில் ரூபா 239,000 தொகை அதாவது 37 சதவீதம் பயன்படுத்தப்படாது மீளளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே முற்பணம் வழங்கப்பட்டிருந்த செயற்பாடுகளுக்கு மாறாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும், மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாது முற்பணம் வழங்கப்பட்டிருந்தமையும், ஒரே பணிக்காகப் பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்படுவதற்கு மேலும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

## 12.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 12.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் அத் திட்டத்தில் குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய காலம் அல்லது காலப்பகுதியும், மதிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கான பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 12.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக ரூபா 850,000 தொகையான மூலதன சொத்துக் கையேற்கப்படுவதற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிராத ரூபா 805,256 கூட்டுத்தொகை செலவில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 (உ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 12.4.3 உள்ளகக் கணக்காய்வு

---

உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 12.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

---

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 12.5 சொத்து முகாமைத்துவம்

---

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

---

2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் காண்பிக்கப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (அ) நிதிப் பிரமாணம் 138 மற்றும் 245(i) | 176,536 | 08 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 753(1) (2) | - | பொருட்கள் பெறப்படுகையிலும் வழங்கப்படுகையிலும் பொருட் பெறுவனவுக் கட்டளைகள் மற்றும் விநியோகக் கட்டளைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 12.7 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) மேற்கொள்ளப்படாத பணிகள்

மீளாய்வாண்டில் போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) துணைச் செயற்பாடு 1 – அபிவிருத்திப் பொறிக்காக சேவை ஆலோசகருடாக பாடசாலைகளிலிருந்து தகவல்கள் சேகரித்தல். (Develop mechanism for collecting information from school system through in service Advisers)

(ii) துணைச் செயற்பாடு 3 – தேசிய பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்காக கொள்கைத் திட்டம் தயாரித்தல். (preparation of policy proposals for development of national universities)

(iii) துணைச் செயற்பாடு 5 – பல்வேறு நாடுகளில் ஆரம்ப பாடத்திட்டம் மற்றும் ஆரம்ப கல்வி நோக்கத்தின் படி திட்ட அறிக்கை தயாரித்தல். (preparation of comparison report on primary curriculam and primary education objectives in various countries).

(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) துணைச் செயற்பாடு 2 – சிறிய பாடசாலை அபிவிருத்திக்காக கொள்கைத் திட்டம் தயாரித்தல். (preparation of policy proposals and strategy for development of small schools) 2012 ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் இச் செயற்திட்டத்தின் 09 மாகாணங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து தகவல் சேகரிக்கப்பட்டு சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மேல் மாகாண பாடசாலைகளிலிருந்து தகவல் சேகரிக்கப்பட்டமை தவிர வேறு செயற்பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) துணைச் செயற்பாடு 4 – கல்வி முறைமை, அலுவலகத்தில் சிங்கள மொழிப் பயன்பாட்டிற்காக தொடர்பாடல் மற்றும் அச்சீட்டு ஊடக நியமங்களை தயாரித்தல் (preparation of standards communication and the printed media for Sinhala language usage in education system, official) உரிய தரப்பினரிடமிருந்து தகவல்கள் சேகரித்து, அறிக்கை தயாரிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, கருத்துக்கள் ஆராயப்பட்டு கொள்கைத் தீர்மானங்கள் தயாரிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சிங்கள மொழிப் பயன்பாடு மற்றும் தரமாக்கல் தொடர்பான கலந்துரையாடல் இரு தடவைகள் நடாத்தப்பட்டமை தவிர வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 12.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) 08 வகைகளுக்குரிய ரூபா 335,450 கூட்டுத்தொகையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.8 (ஈ) இற்கு மாறாக மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படாது வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) அவசர தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு கொள்வனவுக் குழு அங்கீகாரமின்றியும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்றியும் ரூபா 386,500 பெறுமதியான 03 மடி கணனிகளும் 05 எம்எஸ் வின்டொஸ் ஒபிஸ் பகேஜ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 12.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 04 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 09 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 36 | 28 | 08 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலவிய 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

## 13. தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

### 13.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 13.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 13.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) பந்தியிலுள்ள பொது அவதானிப்பு மற்றும் 13.4 இலிருந்து 13.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,600,000 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் இற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 13.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 13.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 13.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உதவியாளர் பதவியணியினரை நியமிப்பதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

## 13.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(i) ஐக்கிய நாடுகளின் செயற்திட்டம் ஒன்றினால் வழங்கப்பட்டிருந்த ஓட்டத்திலிருந்த அகற்றப்பட்டிருந்த 07 மோட்டர் சைக்கிள்களையும் வான் ஒன்றினையும் திருத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 யூன் 07, திசெம்பர் 16 மற்றும் 31 ஆந் திகதிகளில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் ரூபா 1,662,550 பெறுமதியான கணனிகளும் அலுவலக உபகரண இருப்பொன்றும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த இருப்பிலிருந்து பிரதேச அலுவலகங்களிற்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பொருட்கள் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அந்த அலுவலகங்களிற்கு கையளிக்கப்படாது விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், ஆணைக்குழு 2014 மே 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக 2012 ஆம் ஆண்டிற்காகவே வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) பதிவேட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்கள்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மனித உரிமைகள் தொடர்பான செயற்திட்டத்தினால் ஆணைக்குழுவின் பிரதேச அலுவலகங்களிற்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் ஆணைக்குழுவின் பிரதான பொருட்பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு சொத்துக்களை வழங்குதல்**

செயற்திட்டம் ஒன்றிடமிருந்து ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்த 2 மடி கணனிகள் மனித உரிமைகள் செயற்திட்டத்தின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.

## 13.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| | 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டம் | 118,012<br>- | ஊழியர் ஒருவர் விலகிச் செல்கையில் அல்லது ஓய்வு பெறுகையில் செலுத்தப்படுகின்ற பணிக்கொடை இறுதியாகச் செலுத்திய மொத்தச் சம்பளத்திளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் அடிப்படைச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட் டிருந்தமையால் பதிவியிலிருந்து விலகிச் சென்ற நான்கு உத்தியோகத்தர்களிற்கான பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா118,012 குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| | நிதிப்பிரமாணம் 110 | - | சேத நட்டப் பதிவேடு பராமரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>---------------------------------------------- | | |
| | (i) 2.4.1 ஆம் வழிகாட்டல் | 1,819,275 | கொள்வனவு நடவடிக்கைகளிற்காக முறையான கொள்வனவுக் குழுவொன்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவொன்றும் நியமிக்கப்பட் டிருக்கவில்லை. |
| | (ii) 4.3 ஆம் வழிகாட்டல் | 1,406,025 | கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 8.9.1(ஆ) ஆம் வழிகாட்டல் | - | ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்தங்களிற்காக முறைப்படியான உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) 9.3(ஆ) ஆம் வழிகாட்டல் | 227,620 | ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்தங்களிற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2004 சனவரி 24 ஆந் திகதிய 2004/தேநூசே/1 ஆம் இலக்க தேசிய நூலக சுவடிக்கூட சேவைகள் சபையின் ஆலோசனைச் சுற்றுநிருபம் | | நூலகத்தில் காணாமல் போயிருந்த 36 புத்தகங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |

**13.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட முறையற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) ஆணைக்குழுவினால் கண்டி கிளைக்காக ஏறத்தாழ 2,400 சதுர அடிகள் விஸ்தீரணம் கொண்ட இடமொன்று அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளிலிருந்து விலகி மாதத்திற்கு ரூபா 35,000 வாடகை அடிப்படையில் 2013 சனவரி 01 முதல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2003 திசெம்பர் 31 ஆந் திகதிய 113 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த வாகன வாடகை ரூபா 40,000 இனை விஞ்சும் சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரியின்

அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 03 பிரதேச அலுவலகங்களிற்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

## 13.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 20 | 26 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 01 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 154 | 101 | 53 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 66 | 53 | 13 | - |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 273 | 178 | 98 | 03 |

### (ஆ) 25 சதவீத படியினை செலுத்துதல்

2009 நவம்பர் 24 ஆந் திகதிய DMS/A/08/03/1-TEM ஆம் இலக்க நிதி, திட்மிடல் அமைச்சின் கடிதத்துடன் இணக்கமுறாத வகையில் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையின் கீழுள்ள ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிவரும் 05 உத்தியோகத்தர்களிற்கும் அமைய அடிப்படையில் சேவையாற்றிவரும் 03 உத்தியோகத்தர்களிற்கும் 25 சதவீத படியாக ரூபா 306,707 மொத்தமான தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 14. ஒதுக்கீட்டுத் தலைப்பு 14 – சட்டமா அதிபர் திணைக்களம்

### 14.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 17 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 14.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 14.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) மற்றும் (ஆ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 14.4 தொடக்கம் 14.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

திணைக்களத்தினால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய AIA/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைச் சாதனங்கள் மற்றும் கணனி மென்பாகங்கள் தொடர்பான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

01401 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,366,194 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 866,051 தொகை ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தது.

## 14.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 14.5 செயலாற்றல்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள் பின்வரும் பிரிவுகளின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(அ) குற்றங்களுக்கான வழக்குப் பிரிவு

(ஆ) சிவில் பிரிவு

(இ) அரசாங்க நீதிப் பிரிவு

(ஈ) உயர் நீதிமன்றம்

(உ) கூட்டுத்தாபனப் பிரிவு

இதனைவிட விசேடமாக இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட விசேட பிரிவுகளும் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(அ) பொது மக்கள் முறைப்பாட்டு அலகு

(ஆ) சிறுவர் துஷ்பிரயோக வழக்கு அலகு

(இ) ஈஈஆர் அலகு (அவசரகால நிலைமைக் கட்டளைகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்)

(ஈ) குடிவரவு, குடியகல்வு அலகு

மேற்கூறப்பட்ட பிரிவுகள் மற்றும் அலகுகளுக்கிடையே சிவில் பிரிவு, குற்றப் பிரிவு மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்கு அலகு என்பவற்றின் கீழ் 3 வருடங்களின் செயலாற்றல் கூட்டிணைக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 |
| **சிவில் பிரிவு** | | | |
| ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | 2,641 | 2,714 | 2,710 |
| வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை | 176 | 158 | 231 |
| வேலை முடிவடைவடையாத கோவைகளின் எண்ணிக்கை | 2,465 | 5,021 | 7,500 |
| **குற்றப் பிரிவு** | | | |
| ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | 5,464 | 7,176 | 5,221 |
| வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை | 5,029 | 5,451 | 6,474 |

| | | | |
|---|---|---|---|
| வேலை முடிவடைவடையாத கோவைகளின் எண்ணிக்கை | 435 | 2,160 | 907 |

பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்கு அலகு

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | 2,460 | 3,372 | 3,836 |
| வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை | 1,390 | 1,294 | 1,910 |
| வேலை முடிவடைவடையாத கோவைகளின் எண்ணிக்கை | 1,070 | 3,148 | 5,074 |

## 14.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 221 | 176 | 45 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 10 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 167 | 101 | 66 |
| (iv) | ஆரம்ப நிலை | 233 | 172 | 61 |
| (v) | ஏனையவை(ஒப்பந்த அடிப்படை) | 05 | 05 | - |
| | மொத்தம் | 638 | 464 | 174 |

2014 நவம்பர் 11 ஆந் திகதியளவில் சிரேஷ்ட நிலையில் 45 வெற்றிடங்களும் இரண்டாம் நிலை யில் ஒரு வெற்றிடமும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 15. தலைப்பு 15 – சட்டவரைஞர் திணைக்களம்

---

### 15.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்டவரைஞர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சட்டவரைஞருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன

### 15.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்டவரைஞர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புகள் மற்றும் 15.4 இலிருந்து 15.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான

கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 40,010,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீதம் தொடக்கம் 76 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 15.4 செயற்திட்ட அமுலாக்கலில் நலிவுகள்

**செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 185,000,000 தொகையான இலங்கை நீதிக் கொள்கைகளை மீளமைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 27 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 04 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 28 | 34 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 20 | 04 |
| (v) | ஏனையவை | 03 | 03 | - |
| | மொத்தம் | 154 | 82 | 72 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 72 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 16. தலைப்பு 16 – பாராளுமன்றம்

### 16.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**16.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**16.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 16.4 இலிருந்து 16.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

பாராளுமன்றத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
| --- | --- |
| கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கணக்கு விடயங்கள் அவற்றிற்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அக் கணக்கு விடயங்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | பாராளுமன்ற சமையலறை திருத்தப்படல் | 14,608,780 | உரிய கோவை |
| (ii) | வெளிநாட்டு தொடர்புகள் மற்றும் கூட்டமைப்பு அலுவலகச் செலவினம் | 10,000,000 | எவ்வித தகவலும் |
| (iii) | பங்களிப்பு மற்றும் அன்பளிப்புப் பணம் | 9,500,000 | எவ்வித தகவலும் |
| (iv) | வெளிநாட்டுத் தொடர்பாடல் மற்றும் கூட்டமைப்பு அலுவலகம் மற்றும் பங்களிப்பு மற்றும் அன்பளிப்புத் தொகை 2008 முதல் 2012 வரை | 237,600,000 | எவ்வித தகவலும் |
| (v) | பாராளுமன்ற பொது நலவாய மாநாட்டுக்கான செலவினங்கள் | 87,300,000 | எவ்வித தகவலும் |

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்**

பாராளுமன்றத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பாதீட்டு முரண்**

------------------------

18 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு ரூபா 59,432,028 தொகையானதுடன் அச் சேமிப்பு செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 7 சதவீதத்திற்கும் 82 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

--------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2,464,152 ஆக இருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வைப்புக்களின் காலப்பகுப்பாய்வின் கூட்டுத்தொகை ரூபா 2,453,502 ஆகக் காணப்பட்டது. இதன் படி ரூபா 10,650 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01601 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கின் மீதான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத்தினத்தில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,928,695 ஆகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதி ரூபா 1,928,695 ஆகக் காணப்பட்டதுடன் அக் கடன் மீதியில் 55 சதவீதம் அதாவது ரூபா 1,057,862 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவிவரும் கடன் மீதிகளாகக் காணப்பட்டன.

(iii) வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 94,240 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 91,990 தொகை 16 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த மீதியாகும். இக் கடன் மீதிகளை

அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்கத்துவக் கடன் பதிவேட்டில் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட கடன் வகையின் படி தயாரித்திருக்கவில்லை.

**16.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**16.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாராளுமன்றத்தால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**16.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் செயற்படுத்தல்**

காலாண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மூன்று கூட்டத்தொடர்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**16.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தால் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) **தீர்க்கப்படாத பொறுப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான காலமாக நிலவிவரும் தீர்க்கப்படாத பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 32,333,311 ஆகக் காணப்பட்டது.

### 16.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| (i) 1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணியினர் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு | - | பாராளுமன்ற பதவியணியினருக்கு வருடாந்த சம்பள ஏற்றங்களுக்கு மேலதிகமாக 10 சம்பள ஏற்றங்கள் வழங்கப்படுகையில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணியினர் அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு | | பாராளுமன்ற பதவியணியினரின் ஆலோசனைச் செயற்பாட்டுக் குழுவிற்கு சம்பளம் வழங்கப்படுவது தொடர்பான நிபந்தனைகள், வாடகைக் கொடுப்பனவு, ஏனைய படிகள், சம்பள ஏற்ற வழங்கல்கள், லீவு, ஓய்வு பெறும் வயது மற்றும் ஓய்வூதியச் சம்பளம் போன்றவை தொடர்பான நிதிப் பிரமாணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| II ஆவது அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | - | (i) தாபனத்தால் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) அமைச்சரவையால் பாராளுமன்ற ஊடக உத்தியோகத்தருக்கான பதவி அங்கீகரிக்கப்படுகையில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. அவ் ஆணைக்குழு வால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த தகைமையை யேனும் கொண்டிராத ஓர் உத்தியோகத்தர் அப் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

(iii) மனைக் கட்டுப்பாட்டு உதவியாளர் பதவியில் கடமையாற்றிய ஓர் ஊழியர் பொருட்களைப் பொறுப்பேற்கும் பதவிக்கும், தோட்டப் பராமரிப்பு உதவியாளர் (அமைய) பதவியில் கடமையாற்றிய ஊழியர் பொருட்களைப் பொறுப்பேற்கும் பதவிக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். இந் நியமனம் தொடர்பாக உரிய ஊழியர்களின் கோரிக்கை மாத்திரம் அடிப்படையாக் கொள்ளப்பட்டிருந்ததுடன் நியமனக் கடிதத்தில் அவ் ஊழியரின் கோரிக்கையின் அடிப்படையில் அப் பதவி வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 115(3) (ஆ) | 1,782,523 | அதிகாரப்பொறுப்புடைய ஓர் உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 754(4) | - | டயர் இருப்புப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 102, 103, 104 மற்றும் 110 | 8,775 | ஞாபகார்த்த விற்பனைக்கூடத்தில் காணாமற்போன பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) பொது நிருவாகச் சுற்றறிக்கை | | |
| 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பந்தி | | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) அரச நிதிச் சுற்றறிக்கை | | |
| 2003 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி | | வாகனக் கைதவிர்ப்பின் போது 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த பொருளாதார ரீதியாக பயனற்ற வாகனங்களுக்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய போதிலும் வாகனக் கைதவிர்ப்பின் போது இது குறித்து கவனம் செலுத்தப்படாது 5 ஆண்டுகளுக்கு குறைவான வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டிருந்தன. |

## 16.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

2007 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தினால் மூடப்பட்டிருந்த பழைய வங்கி நடைமுறை கணக்கில் காசேட்டின் படி ரூபா 1,315,440 தொகையான மேலதிகப்பற்று மீதியொன்று நிலவியமை 2013 சனவரி 01 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அம் மேலதிகப் பற்று மீதியில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 596,548 தொகை தீர்க்கப்பட்டதாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் ரூபா 718,891 மேலதிகப் பற்று பழைய நடைமுறைக் கணக்கில்

நிலவுவதாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கணக்காய்வின் போது அக் கொடுக்கல்வாங்கலை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் மேலதிகப் பற்றும் தீர்க்கப்படும் சரியான தன்மை குறித்தும் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 16.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்ற கூட்டங்கள் நடாத்தப்படும் நாட்களில் பி.ப 6.30 இன் பின்னர் சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து நெருக்கடியைக் கருத்திற்கொண்டு செலுத்தப்படும் போக்குவரத்துப் படிப்பணம் உத்தியோகபூர்வ வாகன வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது.

### 16.9 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்

பாராளுமன்றத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக முறையான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அப் பந்திகளிற்கான தொடர்பு பின்வருமாறாகும்.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இல | |
| 2009 | 5(அ)ii | பாராளுமன்றத்தின் இரு உத்தியோகத்தர்கள் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைச்சாத்திட்டிராமையால் சேமித்திருந்த ஓய்வு லீவிற்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 264,910 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. |
| | 7 (இ) | 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சமையலறை நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக 2010 யூன் 30 ஆம் திகதி வரை ரூபா 20,141,658 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சமையலறையின் சுத்தம் |

| | | |
|---|---|---|
| | | பேணப்படும் வகையில் நீர் வெளியேற்றும் முறைமை அமைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2011 | 1.5(அ)(i) | பாராளுமன்றத்தின் பதவியணியின் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரம் இன்றி பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளரால் மூன்று உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த சம்பள ஏற்றங்களுக்கு மேலதிகமாக 14 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 16.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 51 | 4 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 150 | 128 | 22 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 208 | 190 | 18 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 470 | 445 | 25 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 73 | 83 | - | 10 |
| | மொத்தம் | 956 | 897 | 69 | 10 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 69 வெற்றிடங்களை நிரப்புவதற்குநிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மேலதிக பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 17. தலைப்பு 17 - பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அலுவலகச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 17.4 இலிருந்து 17.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலளிப்பு**

மீளாய்வாண்டின் போது அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 138,629 அதாவது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பட்டின் 9 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் எஞ்சியிருந்தது.

**17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**17.4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**17.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**17.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| VII ஆம் அத்தியாயத்தின் 9.3 ஆம் பிரிவு | - | 2004 ஆம் ஆண்டு முதல் வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலாக 10 சம்பள ஏற்றங்கள் சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. |
| XXI ஆம் அத்தியாயம் | 42,000 | சீருடைப் படிப்பணம் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக பதவிநிலை அல்லாத 07 உத்தியோகத்தர்களுக்காகவும் சீருடைப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் | | |
| 2 ஆம் பந்தி | | 05 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதியப்பட்டிருக்கவில்லை. |
| 3 ஆம் பந்தி | | அலுலகத்தில் உள்ள பதவியணியைக் கருத்திற்கொள்ளாது சகல அலுவலகங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 (அ) பந்தி | 22,000 | சீருடைக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் அங்கீகரித்த எல்லைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

**17.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

---

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தில் அகில இலங்கை சேவைகளான இலங்கை நிர்வாக சேவையின் மற்றும் ஒன்றிணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள் கடமையாற்றியிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களுக்கு பாராளுமன்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 4 சந்தர்ப்பங்களின் போது 10 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ் உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற பதவியணிக்கு வெளியே வேறு திணைக்களங்களுக்கோ அமைச்சுக்களுக்கோ இடமாற்றலாகிச் செல்லும் சந்தர்ப்பங்களின் போது அந் நிறுவனங்களில் கடமையாற்றும் சமமான தரத்திலான ஏனைய உத்தியோகத்தர்களின் சம்பளத்துடன் முரண்கள் ஏற்படக்கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**17.7 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 08 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 11 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 31 | 26 | 05 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 18. தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்

---

### 18.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 18.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 18.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது

அவதானிப்புக்கள் மற்றும் 18.4 முதல் 18.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

01 செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதியேற்பாடு பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 76,328 ஆக இருந்தது. அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 15 சதவீத அளவாகக் காணப்பட்டது.

## 18.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 18.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 18.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்படுவதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 18.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அலுவலகத்தால் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 107,531 ஆகக் காணப்பட்டது. இப் பொறுப்புகளுக்கு மேவதிகமாக ரூபா 1,030,862 தொகையான பொறுப்புகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 18.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| XXI ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகள் | 90,000 | தாபன விதிக்கோவையின் பிரகாரம், சீருடைக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அலுவலகத்தின் பதவிநிலை மற்றும் பதவிநிலையற்ற உத்தியோகத்தர்கள் 15 பேருக்கு சீருடைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| (i) 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(ஆ) ஆம் பிரிவு | 36,000 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரித்துடைய சீருடைக் கொடுப்பனவிற்கு மேலாக சீருடைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(1) ஆம் பந்தி | - | 4 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் எவ்வித பதிவேட்டிலும் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (iii) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | - | கூட்டம் இடம்பெறும் நாளில் பி.ப 6.30 இன் பின்னர் கடமையாற்றுவதற்காக ஒரு நாளுக்கு செலுத்தப்படும் ரூபா 750 தொகையான கொடுப்பனவு, வருகைப் பதிவேட்டின் மூலம் அல்லது கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் அல்லது வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாது நான்கு உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப் பட்டிருந்தது. |
| (iv) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | - | நிறுவகத்தில் உள்ள பதவியணி தொடர்பாகக் கருத்திற்கொள்ளாது கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 18.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும் நாட்களின் போது சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு செலுத்தப்படும் நாளொன்றிற்கான ரூபா 750 தொகையான படிக்கொடுப்பனவு உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது.

## 18.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 4 சந்தர்ப்பங்களின் போது 10 மேலதிகச் சம்பள ஏற்றங்கள் உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்தது.

## 18.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 08 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 11 | 04 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 16 | 01 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 43 | 38 | 06 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

## 19. தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம்

---

### 19.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 19.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் 19.4 இலிருந்து 19.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி மற்றும் கணனி மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

### (ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கு 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,797,660 தொகை அதாவது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதம் தொடக்கம் 54 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ii) காப்புறுதிக் கட்டணமாக செலவிடப்பட்ட ரூபா 117,720 தொகையான மீண்டெழும் செலவினம் மூலதன செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**19.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**19.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**19.4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**19.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**19.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | மோட்டார் சைக்கிள் | 01 | 02 வருடங்கள் |
| (ii) | கணனி (மொனிட்டர்) | 02 | 02 வருடங்கள் |
| (iii) | கணனி (யூபீஎஸ்) | 05 | 02 வருடங்கள் |
| (iv) | செலியூலர் தொலைபேசி | 01 | 02 வருடங்கள் |
| (v) | டேப் ரெகோடர் | 01 | 02 வருடங்கள் |

## 19.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | |
| (i) XXVIII ஆவது அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு மற்றும் 1989 நவம்பர் 30 ஆம் திகதிய 58/89 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | | செயலாளரின் இணைப்புச் செயலாளர் வரவுப் பதிவேட்டில் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றைப் பதிந்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | XII ஆவது அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவு, V ஆவது அத்தியாயத்தின் 7.1, 7 மற்றும் 2, 7.3 ஆம் பிரிவுகள் மற்றும் VII ஆவது அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | 70,770 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் முறையான வகையில் விடுமுறையை அங்கீகரித்துக்கொள்ளாமல் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. இந்தக் காலப்பகுதியின் போது உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி வெளிநாடு சென்றிருந்த போதிலும் அவருக்கு அந்தக் காலப்பகுதிக்குரிய முழுச் சம்பளமும் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 135(1) | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் பல உத்தியோகத்தர்களின் ஊடாக பரிசீலனைக்கு உட்படும் வகையில் நிதி அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 135(4) | 2013 ஆம் ஆண்டில் நிதிக்கட்டுப்பாடு தொடர்பான செயற்பொறுப்புக்களைக் கையளிக்கும் போது குறிப்பிட்ட நிதி எல்லை காண்பிக்கப்பட்டு முறையான பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 141(3) | நிதிப் பிரமாணம் 139 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தரினால் நிதிப் பிரமாணத்திற்கு முரணாக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படுகின்ற காசோலைகளின் இரண்டாவது கையொப்பமிடுபவராக செயற்பட்டிருந்தார். |

(இ) சனாதிபதி செயலகத்தின் சுற்றுநிருபம்
---------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2012 ஏப்ரல் 09 ஆந் திகதிய பீசீ/எம்டீ/ஏடீ/2/1/1/26 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் (ஆ) பிரிவு | | கணக்காய்வு ஐயவினா தொடர்பாக அலுவலகத்தினால் உடனடியானதும் நாளதுவரையானதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது நிருவாகச் சுற்றுநிருபம்
-------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 04 மற்றும் 05 ஆம் பந்திகள் | 36,512 | மேலதிக எரிபொருள் அங்கீகரிக்கப்படாமல் வாகனத்திற்காக அரசாங்கத்தின் கட்டளை மூலம் எரிபொருள் பெறப்பட்டிருந்தது. |
| (ii) 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி | | கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் சில உத்தியோகத்தர்கள் அலுவலகத் தினால் பேணப்படும் வரவுப் பதிவேட்டிலும் கையொப்பமிட்டிருக்க வில்லை. |
| (iii) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 06 ஆம் பந்தி | 16,440 | இணைப்புச் செயலாளருக்கு வெளிநாடு சென்றிருந்த ஒரு மாத காலப்பகுதிக்காகவும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தி | | தகைமையுள்ள இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்படாமல் வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. |
| (v) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.11 ஆம் பந்தி | | செலவிடப்பட்ட எரிபொருள் அளவு மற்றும் ஓடப்பட்ட தூரத்தின் அளவு என்பன ஓட்ட அட்டவணைகளில் தினந்தோறும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (vi) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பந்தி | 06 மாதங்களுக்கு ஒரு தடவை நுகரப்படுகின்ற எரிபொருளின் அளவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை |

(உ) அரச நிதிச் சுற்றுநிருபம்

---

| | |
|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தி | 721,143 விமானச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விமானப் பயணங்களை ஒழுங்கமைத்தல் செயற்பாடுகள் அரச வங்கியின் கீழுள்ள இணைக் கம்பனி மூலம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்

---

| | |
|---|---|
| 2008 ஏப்ரல் 04 ஆந் திகதிய 138 ஆம் இலக்க சுற்றுநிருபம் | எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 2,957,984 இனால் விஞ்சியிருந்த போதிலும் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

(எ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

---

| | |
|---|---|
| (i) 3.4.3(அ) வழிகாட்டி | கொள்வனவு செய்த 05 சந்தர்ப்பங்களில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 3.4.3(ஈ) வழிகாட்டி | 2013 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்க வில்லை |

**19.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கூட்டம் நடாத்தப்படுகின்ற தினங்களில் பி.ப. 6.30 இன் பின்னர் சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்காக போக்குவரத்துக் சிரமங்களைக் கருத்திற் கொண்டு நாளொன்றிற்கு ரூபா 750 படிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான மூன்று உத்தியோகத்தர்களுக்கும் இந்த போக்குவரத்துப் படிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தை புனரமைப்பது தொடர்பான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,150,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் மேலதிகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நிர்மாண வடிவமைப்பாளர்களின் தொழில் கட்டணம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவக் கட்டணம் மற்றும் பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 28,400,000 தொகையை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு 2011 யூன் 09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரத்தை கருத்திற் கொள்ளாது 2012 நவம்பர் 01 ஆந் திகதி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 33,924,645 தொகை (பெறுமதி சேர் வரியின்றி) அளவிடையை ஏற்றுக்கொண்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 31,357,984 தொகை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) எரிபொருள் நுகர்வு ஒரு லீற்றருக்கு 08 கிலோமீற்றராகக் காணப்பட்ட வாகனத்திற்கு 789 கிலோமீற்றர் பிரயாணம் செய்வதற்கு 170 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 71 லீற்றர் எரிபொருள் மேலதிகமாகப் பெறப்பட்டிருந்தது.

**19.8 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரமற்ற பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணியினர் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவிற்கு முரணாக அமைச்சரவை அங்கீகாரமின்றி வருடாந்த சம்பள அதிகரிப்பிற்கு மேலதிகமாக 4 சந்தர்ப்பங்களின் போது 10 மேலதிக சம்பள அதிகரிப்பு 10 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/1 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டுப் பயணத்தின் போது நாட்டிலிருந்து வெளியேறிய நேரம் தொடக்கம் திரும்ப நாட்டிற்கு வருகைதரும் வரையான நாட்களின் எண்ணிக்கையின் படி, படிப்பணம் செலுத்தும் போது ரூபா 281,103 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 19.9 நட்டம் மற்றும் இழப்பு

04 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதி இழப்பீடாக ரூபா 242,935 தொகை கிடைத்திருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான கூற்றில் அந்த விபரங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 19.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 06 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 20 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 16 | 01 |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 10 | 10 | - |
| | மொத்தம் | 62 | 54 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உதவிச் செயலாளர் மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகள் முறையே 2011 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தொடக்கமும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கமும் வெற்றிடமாகக் காணப்பட்டன

## 20. தலைப்பு 20 – தேர்தல்கள் திணைக்களம்

---

### 20.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேர்தல்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 20.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 20.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்களில் இங்கே (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் பின்வரும் 20.4 தொடக்கம் 20.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

02001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 972,966 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு இயலாது போயிற்று.

## 20.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேர்தல்கள் செயலகக் கட்டிடத்திற்கான சேர்ப்பு, அபிவிருத்தி, தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறை மற்றும் இணைந்த கழிவறை, குளியலறை என்பவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகளுக்காக ரூபா 43,806,496 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டிடத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலைகளுக்காக முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் கட்டிடத் திணைக்களத்துடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரருக்கு 2013 மார்ச் 08 ஆந் திகதியும் 2013 யூலை 08 ஆந் திகதியும் முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 12 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் (Retention Money) பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய பீசீஈ/24/2012 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாரியளவிலான பழுதுபார்த்தலுக்கு செலவினங்களைச் செய்ய வேண்டியேற்படுகின்ற வாகனங்களை தேர்தல் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த முடியாதெனினும், பழுதுபார்க்கக்கூடிய நிலையில் இருந்த அரசாங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு வாகனம் 2012 செப்தெம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பழுதுபார்த்தலுக்காக ரூபா 883,921 தொகையை தேர்தல்கள் திணைக்களம் செலவிட்டுமிருந்தது.

## 20.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 32 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 06 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 481 | 338 | 143 |
| (iv) | ஆரம்ப நிலை | 158 | 143 | 15 |
| | மொத்தம் | 693 | 519 | 174 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 174 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

## 21. தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி

---

### 21.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 17 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 21.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**21.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 21.4 தொடக்கம் 21.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

05 செலவின விடயங்களுக்கு மிகையான ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 55,315,546 ஆக இருந்ததுடன் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 62 சதவீதம் தொடக்கம் 91 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) வருமானக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு 01 இன் பிரகாரம் ரூபா 189,455,801 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாகவும் இருந்தது.

(ii) உரிய ஆண்டு தொடர்பாக கவனத்திற்கொள்ளாது கணக்காய்வுக் கட்டண பற்றுச்சீட்டு வழங்கப்பட்ட திகதியின் பிரகாரம் கணக்கு வைக்கும் முறை அமுல்படுத்தப்பட்டமையின் காரணமாக சில மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற அரை அரசாங்க நிறுவனங்களுக்கிடையே ஒரு பகுதிக்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் 2009 முதல் 2012 வரை சில ஆண்டுகளுக்காக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்த போதிலும் சில நிறுவனங்களிலிருந்து நீண்ட காலமாக கணக்காய்வுக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) சில நிறுவனங்களிலிருந்து முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் அறவிடப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மற்றும் அண்மைய வருடங்களுக்கான கணக்காய்வுக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(v) திணைக்களத்தின் கீழ் பேணப்பட்ட சில நிதியங்கள் கணக்காய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுக் கட்டணப் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிலிருந்து கணக்காய்வுக் கட்டணத்தை அறவிடுவதற்காக உரிய அமைச்சிலிருந்து முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது அசாதாரண தாமதம் ஏற்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

02101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,340,243 கூட்டுமொத்தமாக இருந்தது.

**21.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு போதியளவில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 21.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதியளவிலும் 05 கிளைகளுக்குரிய அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 21.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 354 | 213 | 141 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,215 | 824 | 391 |
| (iii) | இரண்டாம் நிலை | 177 | 138 | 39 |
| (iv) | ஆரம்ப நிலை | 181 | 118 | 63 |
| | மொத்தம் | 1,927 | 1,293 | 634 |

## 22. தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

---

### 22.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ஆணையாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 22.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 22.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 22.4 இலிருந்து 22.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| கணனி, கணனி உப பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் |
| பொறுப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை |

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

02201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 62,987 கூட்டுமொத்தமாக இருந்தது.

## 22.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 22.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 22.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 22.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதிப் பிரமாணம் 94(1) இற்கு இணங்காத வகையில் 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பினை விஞ்சி ரூபா 39,220 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 22.6 செயலாற்றல்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்குக் கிடைத்த 2012 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 682 உம், 2013 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1482 உம் ஆக மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2164 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது சிபார்சு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 131 ஆக இருந்ததுடன் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட 127 கோவைகளும், தீர்வுகாண முடியாத 192 கோவைகளுமாக 450 கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 22.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 18 | 10 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 08 | 02 | 06 |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 01 | 01 | - |
| | மொத்தம் | 30 | 15 | 15 |